தினமலர்

## நெல் அறுவடை - அடுத்தது என்ன?

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,00:00 IST




மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் நெல் அறுவடை தீவிரமாக நடந்து கொண்டு இருக்கின்றது. ஐந்து மாவட்டங்களிலும் எடீடி 45 நெல், நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது. பெருவெட்டு நெல் அம்பை 16ம் நல்ல மகசூல் கொடுத்துள்ளது. திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் நெல் அறுவடைக்குப் பின் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கின்றனர். அணைக்கட்டுகளிலும், கண்மாய்கள் மற்றும் கிணறுகளிலும் தண்ணீர் வசதி சிறப்பாக உள்ளது. தற்போதுள்ள சூழ்நிலை கீழ்க்கண்ட பயிர்களை சாகுபடி செய்ய ஒரு வாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

**நெல் சாகுபடி:** பாசன வசதி நல்லபடியாக இருக்குமிடங்களில் தைரியமாக நெல்லினை சாகுபடி செய்யலாம். தற்போது குறுகிய கால நெல் ரகங்களான ஜே-13 மற்றும் ஆடுதுறை 36 நெல் ரகங்களை சாகுபடி செய்யலாம். பச்சரிசிக்கு ஏற்ற கர்நாடகா பொன்னியை சாகுபடி செய்யலாம். ஆனால் இது பூஞ்சாள வியாதி தாக்குதலால் பாதிக்கப்பட்டு கருப்பு நெல் விழும். இதை கவனித்து ஆராய்ந்து செயல்பட வேண்டும். அடுத்து எல்லா

பட்டங்களுக்கும் ஏற்ற 100 நாள் நெல்லாகிய ஜே13 போடலாம். தவறாமல் பலன் தரக்கூடிய ஜே13 நெல் ரகத்தைப் பற்றி மதுரை விவசாயிகள் நன்கு அறிவார்கள். அடுத்து ஆடுதுறை 45 ரகத்தை விவசாயிகள் போட விரும்புகின்றனர். இருப்பினும் பூஞ்சாள நோய் வராமல் தடுக்க திறன் பெற்றவர்கள் சாகுபடியில் ஈடுபடலாம்.

**காய்கறி சாகுபடி:** தற்போது காய்கறி சாகுபடி செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிட்டும். ஆனால் காய்கறி சாகுபடி கடுமையானது. விவசாயிகள் பாடுபட்டு காய்கறி சாகுபடி செய்யலாம். குறுகிய கால காய்கறியான வெண்டையை சாகுபடி செய்து அதில் ஊடுபயிராக சீனி அவரையை (கொத்தவரை) சாகுபடி செய்யலாம். இப்பயிர் மாசி மாதத்தில் நல்ல மகசூல் தருகின்றது. வெண்டையில் இருபது அறுவடைகள் வரை கிடைக்கும். காய்கறி சாகுபடியில் பாடுபட்டு உழைத்தால் ஏக்கரில் குறுகிய காலத்தில் ரூ.8,000 வரை லாபம் எடுக்கலாம்.

**உளுந்து சாகுபடி:** தை பட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யலாம். பாசன வசதி குறைவாக இருக்கும் இடத்தில் உளுந்து சாகுபடி செய்யலாம். விவசாயிகள் நஞ்சை நிலத்தை உழுது புழுதியாக்கி டி9 ?உளுந்தினை (வயது 90 நாட்கள்) விதைக்கலாம். ஏக்கருக்கு 8 கிலோ விதை தேவைப்படும். நிலத்திற்கு தொழு உரத்தோடு உயிர் உரங்களையும் அடியுரமாக இடலாம். வளர்ந்த செடிகள் மேல் டி.ஏ.பி. கரைசல் தெளிக்கலாம். சங்கு பருவத்தில் பூக்கள் தோன்றும்போது தெளிக்கலாம். பூச்சிகளை அழிக்க செவின் தூள் அல்லது எண்டோசல்பான் மருந்து தெளிக்கலாம். ஏக்கரில் 300 கிலோ மகசூல் கிட்டும். உளுந்திற்கு நல்ல விலை கிடைக்கின்றது. நெல் பயிர் அறுவடை செய்ய இருக்கும் இடத்தில் உளுந்தினை தூவலாம். தஞ்சாவூர் விவசாயிகள் இம்முறையை அனுசரிக்கின்றனர். ஆடுதுறை 2, 3, 4 போன்ற ரகங்களை நெல் தரிசில் சாகுபடி செய்யலாம். விதை விதைக்கும்போது மண் மெழுகு பதத்தில் இருக்க வேண்டும். உளுந்து சாகுபடி நஞ்சை நிலத்தின் வளத்தை கூட்டுகின்றது.

**சணப்பு சாகுபடி லாபம் தரும்:** சணப்பு சாகுபடியில் கிடைக்கும் மகசூலான விதைகளை விற்று லாபம் பெறலாம். விதைகளை விதைத்து சணப்பு செடிகளை பூமியில் மடக்கி உழும்போது ஏக்கரில் 10,000 கிலோ தழை கிடைக்கும். ஏக்கரில் 37 கிலோ தழைச்சத்து கிடைக்கும். வாழை சாகுபடி செய்யும் நிலத்தில் சணப்பு செடிகளை உழுதுவிட்டால்

வாழையை தாக்கும் நூற்புழுக்கள் அழிந்துவிடும். மணிலா சாகுபடியில் சணப்பு உதவுகின்றது. பூமியில் சணப்பினை விதைத்த பின் வளர்ந்து வரும் சணப்பு செடிகளை பூமியில் உழுதுவிட்டால் மணிலா பயிரை பூச்சிகள் தாக்காது. மேலும் கிடைக்கும் மணிலா மகசூல் நல்ல தரம் கொண்டதாக இருக்கும். சணப்பினை விதை விதைத்து 80-85 நாட்களில் அறுவடை செய்யலாம். விதைகள் பிடிக்கும் இடம் செடியின் மேல் பாகத்தில் இருப்பதால் அந்தப்பகுதியை மட்டும் வெட்டி எடுத்து விதையை பிரித்து எடுத்துவிடலாம். இதனை பதப்படுத்தி விற்பனை செய்யலாம். மீதமுள்ள செடிகளை பூமியில் உழுது பூமியின் வளத்தை கூடுதலாக்கிவிடலாம். ஏக்கரில் 1,600 கிலோ மகசூல் கிட்டும். சணப்பு சாகுபடியில் நல்ல லாபம் கிட்டும். தற்போது மதுரை பகுதியில் நிலவும் சூழ்நிலை விவசாயிகளுக்கு தங்கள் திறமையை எடுத்துக்காட்ட ஒரு வாய்ப்பாகும். விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட அம்சங்கள் உதவும். (1) கடுமையான உழைப்பு (2) விஞ்ஞான தொழில்நுட்பங்களை அனுசரித்தல் (3) செயல் ஆற்றல் திறன் அல்லது நிர்வாகத்திறன்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

---

### இந்திய பாரம்பரிய உணவு வகைகளில் லெண்டில் பருப்பு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,00:00 IST



லென்டில் என்பது ஒரு வகையான பருப்பு. நாம் அன்றாடம் உபயோகிக்கும் பருப்பு வகைகளான உளுந்து, துவரை, பாசிப்பயறு ஆகியவற்றால் தயார் செய்யப்படும் உணவுகளை சத்துக்களில் ஒருமைப்பாடு கொண்ட லென்டில் பருப்பு கொண்டும் தயாரிக்கலாம். செலினியம் எனப்படும் நுண்சத்து இப்பருப்பில் உள்ளடங்கியதே இதன் சிறப்பம்சமாகும். மூளை வளர்ச்சிக்கும், அஜீரணக் கோளாறுகளை அகற்றுவதற்கும், கொழுப்புச்சத்தை குறைப்பதற்கும், குழந்தை மற்றும் முதியவர்களுக்கும் ஏற்ற உணவாக அமைகிறது.

**லென்டில் சத்து பட்டியல்**

மாவுச்சத்து - 65 - 100 கிராம், புரதச்சத்து - 23.50 - 100 கிராம், கொழுப்புச்சத்து - 1.14 - 100 கிராம், நார்ச்சத்து - 1.10 - 100கிராம், சுண்ணாம்புசத்து - 68மில்லிகிராம் - 100 கிராம், இரும்புச்சத்து - 3.30 மில்லிகிராம் - 100 கிராம், செலினியம் - 0.60 மில்லி கிராம் - 100 கிராம்.

நம்முடைய உணவுப் பழக்கங்களுக்கு ஏற்றவாறு லென்டில் பருப்பை தயார்நிலை உணவுகள், இட்லி, பொங்கல், பிசிபெல்லாபாத், சாம்பார், வடை, உடனடியாக உபயோகிக்கக்கூடிய இட்லி மிக்ஸ், தோசை மிக்ஸ், தோக்லா மிக்ஸ், பொடி வகைகளான இட்லி பொடி, பருப்பு பொடி மற்றும் இனிப்பு கார வகைகளையும் தயாரிக்க பயன்படுத்தலாம். உதாரணமாக லென்டில் லட்டு தயாரிக்கப்படுவது கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**லென்டில் லட்டு**

லென்டில் மாவு -100 கிராம், தண்ணீர்-100மில்லி லிட்டர், சர்க்கரை-300 கிராம், எண்ணெய்-பொரிக்க தேவையானவை, நெய்-100 மில்லி லிட்டர், முந்திரி-15 கிராம், ஏலக்காய்-5 கிராம், திராட்சை15 கிராம், கிராம்பு-2 கிராம், பச்சை கற்பூரம்-1 கிராம்.

**செய்முறை:** லென்டில் மாவுடன் போதுமான அளவு தண்ணீர் கலக்கவும். எண்ணெயை நன்கு சூடாக்கவும். கரைத்த மாவை பூந்தி கரண்டியில் ஊற்றி பொன்னிறமாக பொரிக்கவும். சர்க்கரை பாகு தயாரித்து அதனுடன் பச்சை கற்பூரம் சேர்த்துக் கலக்கவும்.

பொரித்த பூந்தியுடன் நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை இவற்றை சர்க்கரைப்பாகுடன் கலந்து உருண்டைகளாக்கவும்.

**தொடர்புக்கு: புஷ்பா, பேராசிரியர், உணவு பதனிடும் துறை, த.நா.வே.பல்கலைக்கழகம், கோவை. 0422-661 1340.**
**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

---

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,00:00 IST

**நெல் அரவை உபரிப் பொருட்கள் மூலம் மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரித்தல்:** தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகமும் தஞ்சாவூரிலுள்ள இந்திய பயிர்பதன தொழில்நுட்ப கழகம் மற்றும் அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சாகா புட்ஸ் ஆகியவை கூட்டாக இணைந்து இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் நிதியுதவி மூலம் பல்வேறு வகை நெற்பயிர்களில் இருந்து கிடைக்கும் குறைந்த மதிப்புடைய அல்லது வீணாகும் உபரிப் பொருட்களைக் கொண்டு பல்வேறு வகையான மதிப்பூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளனர்.

**நெல்லில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் நுட்பங்கள்:** உடைந்த அரிசி, பொடிக்குருணையிலிருந்து பால் தயாரித்தல்; உடைந்த அரிசியிலிருந்து லட்டு தயாரித்தல்; உடைந்த அரிசி, பயறு வகை உபரிப்பொருட்களிலிருந்து வடகம் தயாரித்தல். உடைந்த அரிசி, பொடிக்குருணைகளில் இருந்து பால் தயாரித்தல்: தேவையான பொருட்கள்: உடைந்த புழுங்கல் அரிசி, பச்சரிசி மாவு - 100 கிராம், நீர்-800 மிலி, மிளகாய் பொடி-1கிராம், சர்க்கரை-100 கிராம், வெல்லம்-120 கிராம்.

**செய்முறை:** 100 கிராம் உடைந்த புழுங்கல், பச்சரிசி மாவை 800 மி.லி. தண்ணீரில் 4 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். ஊறவைத்தபின் அதிலுள்ள நீரை வடித்துவிட்டு அதனுடன் மிளகாய்பொடி, சர்க்கரை, வெல்லம் சேர்க்க வேண்டும். அதனை கொதிக்கும் தண்ணீர் உள்ள கலனில் வைத்து 5 நிமிடம் வெப்பப்படுத்த வேண்டும். பின் அதனை அறை வெப்பநிலையில் வைத்து குளிரூட்ட வேண்டும். கண்ணாடி பாட்டில்களில் ஊற்றி

அதனை மூடவேண்டும். பின் இதனை குளிரூட்டி தேவையான நேரங்களில் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். உடைந்த அரிசியில் இருந்து வடகம் தயாரித்தல்: தேவையான பொருட்கள்: உடைந்த புழுங்கல், பச்சரிசி மாவு(1:1) - 300 கிராம், மிளகாய் பொடி- 1கிராம், சீரகம்-4 கிராம், உப்பு-2 கிராம், மிளகு-2 கிராம், நீர்-200 மிலி.

**செய்முறை:** உடைந்த புழுங்கல், பச்சரிசி மாவை எடுத்து அதை நன்றாக சல்லடை கொண்டு சலிக்க வேண்டும். பின் இரண்டு அரிசி மாவையும் 1:1 என்று சேர்த்து அதனுடன் மிளகாய் பொடி, சீரகம், நீர் சேர்த்து நன்றாக 20 நிமிடம் சமைக்க வேண்டும். பின் அந்த கூழ் போன்றதை கையில் இயங்கும் பிழிவான் (எக்ஸ்ட்ரூடர்) கொண்ட தேவையான அளவு பிழிய வேண்டும். பின் உலரவைப்பான் (டிரையர்) மூலம் உலரவைத்து அதை பாலிதீன் பைகளில் இட்டு அறைவெப்பநிலையில் பயன்படுத்தலாம். இதுபோன்ற உபரிப் பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களின் மூலம் உழவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதோடு மட்டுமல்லாமல் தொழில் செய்யும் வாய்ப்பும் கிடைக்கும்.
**(தகவல்: எம்.ராமநாதன், பா.கலைச்செல்வம், பி.மாசிலாமணி, சந்தை விரிவாக்கத்துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், விரிவாக்கக்கல்வி இயக்ககம், கோயம்புத்தூர்-641 003.)**

---

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,00:00 IST

**உழவர் கண்டுபிடிப்பு -** ராஜராஜன் 1000க்கு நடவு குறியீட்டுக்கருவி: விவசாயி தன்னுடைய நிலத்தில் களிமண் பாங்கு அதிகம் இருப்பதால் நடவு குறியீட்டுக் கருவியினை பரிந்துரைப்படி கடைபிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார். எனவே தானே ஒரு குறியீட்டுக் கருவியினை உருவாக்கினார். அதாவது மூன்றேமுக்கால் அடி நீளத்தில் 11' பிவிசி அளவுள்ள உருளையில் எடை குறைந்த, எளிதில் உபயோகிக்கக்கூடிய குறியீட்டுக் கருவியை தயாரித்துள்ளார். இக்கருவி உபயோகத்தால் தனக்கு ஒரு ஏக்கர் நடவிற்கு 12 பணியாட்களுக்குப் பதிலாக 6 நபர்களே

தேவைப்பட்டனர். இதன் பயன்பாடு தற்பொழுது 980 எக்டர் நிலத்தில் உள்ளது என்று கூறுகிறார் விவசாயி. மற்ற உழவர்கள் இதனை பயன்படுத்தி நன்றாக இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். இதன் பயன்பாடு நேரடி நெல் விதைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விலை ரூ.350/-தான். இதனை பயன்படுத்தினால் விதை அளவு குறைந்து கோனோ களைக்கருவி உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்கிறது என்று கூறுகிறார் விவசாயி.

**தொடர்புக்கு:** பாலகுரு, கருணாவூர் கிராமம், மன்னார்குடி தாலுகா, திருவாரூர். 94425 25236.

நெல்லில் சக்கர உருளை வடிவ களைக்கருவி: சுமார் 10 கிலோ எடையுள்ள இக்கருவியை வடிவமைத்த விவசாயி கூறுவது: இக்கருவி களைகளை சுலபமாக அகற்றி மண்ணில் அமிழ்த்திவிடுவதால் தனக்கு களை மேலாண்மை உர மேலாண்மையில் வெற்றி கிட்டியது என்கிறார். இக்களைக்கருவியினை மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்தின் ஆலோசனையின்படி பிற உழவர்களுக்கு விலைக்கு கொடுப்பதில் சராசரியாக ரூ.15,000 வருமானம் கிடைக்கிறது என்று கூறும் விவசாயியின் தொடர்பு முகவரி: **சண்முகசுந்தரம், கல்லேரிப்பட்டி, ஆத்தூர், சேலம். 94427 82142.**

**வாழைநார் திரிக்கும் கருவி:** சைக்கிளில் உள்ள சக்கரத்தினைப் பயன்படுத்தி கயிறு திரிக்கும் சாதனத்தை உருவாக்கியுள்ளார் விவசாயி. இதன்மூலம் அவருக்கு சராசரியாக 15,000 மீட்டர் அளவிற்கு கயிறு உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. 40 கூலியாட்கள் மூலம் இரண்டு தொழில்நுட்ப கூடங்களை அமைத்தார். இன்று அவர் தமிழ்நாடு மட்டுமின்றி, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு அவர் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை (வாழைநார் பைகள், கயிறு) எடுத்துச்சென்று வியாபாரம் செய்கிறார். மத்திய அரசு விவசாயியைக் கவுரவித்து 2 லட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்று

கூறும் விவசாயியின் தொடர்பு முகவரி: **பி.எம்.முருகேசன், மேலக்கால் கிராமம், திருமங்கலம், மதுரை. 93605 97884.**

உழவர்கள் தாங்கள் கண்டுபிடிக்கும் புதிய முயற்சிகளில் ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் உதவிகளுக்கு உங்கள் மாவட்டத்திலுள்ள வேளாண் அறிவியல் மையத்தை தொடர்பு கொள்ளலாம். **(தகவல்: உழவரின் வளரும் வேளாண்மை, 13-15, டிசம்பர் 2010) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

---

**கரும்பு பயிரிட விவசாயிகள்... ஆர்வம் : நெல் விலை வீழ்ச்சி எதிரொலி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,21:24 IST

நெல்லிக்குப்பம் : நெல் விலை குறைந்துள்ளதாலும், புதிய தொழில் நுட்பங்கள் காரணமாக ஆட்கள் தேவை குறைந்துள்ளதால் விவசாயிகள் கரும்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் நான்கு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளுக்கு சப்ளை செய்ய ஆயிரக்கணக்கான விவசாயிகள் கரும்பு பயிரிட்டு வந்தனர். கரும்பு பயிரிட ஆட்கள் அதிகம் தேவை. ஆனால் விவசாய தொழிலுக்கு ஆட்கள் வருவது குறைந்ததால் பெரும்பாலான விவசாயிகள் கரும்பு பயிரிடுவதை தவிர்த்தனர். பல விவசாயிகள் நெல் பயிரிடத் துவங்கினர். நடவு முதல் அறுவடை வரை இயந்திரங்கள் பயன்படுத்தத் துவங்கியதால் ஆட்கள் தேவை குறைந்தது. இன்னும் சில விவசாயிகள் ஆட்கள் பிரச்னை காரணமாக நல்ல மகசூல் கிடைக்கும் நிலங்களில் கூட சவுக்கு பயிரிடத் துவங்கியதால் கடந்த மூன்றாண்டுகளாக மாவட்டத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு வெகுவாக குறைந்தது. இரண்டு ஆண்டுகளாக நெல்லுக்கு நல்ல விலை கிடைத்ததால் கரும்பு நடவு குறைந்தது. இதனால் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் வெளி மாவட்டங்களில் இருந்து கரும்பு கொள்முதல் செய்யத் துவங்கினர். மேலும், புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு பயிரிட்டால், ஆட்கள் தேவை குறைவதோடு, குறைந்த பரப்பளவில் அதிக கரும்பு பயிரிட முடியும். அதன் மூலம் அதிகம் லாபம் ஈட்ட முடியும் என்பதை சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் விவசாயிகள் மத்தியில் பல்வேறு முகாம்களை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தனர். இந்நிலையில் இந்த ஆண்டு நெல் விலை திடீரென குறைந்துள்ளது.

அதேபோன்று ஒன்னரை லட்சம் ரூபாய்க்கு விலைபோன ஒரு ஏக்கர் சவுக்கை மரம் தற்போது 80 ஆயிரம் ரூபாயாக குறைந்தது. இதனால் விவசாயிகள் பலர் தற்போது கரும்பு பயிரிட ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர். கரும்பு பயிரிட வங்கியில் சுலபமாக கடன் கிடைப்பதும் இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. அதன்படி நெல்லிக்குப்பம் இ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 4,500 ஏக்கர் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. இதேப்போன்று மற்ற மூன்று சர்க்கரை ஆலை பகுதிகளிலும் கரும்பு பயிரிடுவது அதிகரித்துள்ளது. இதனால் வரும் நான்கு ஆண்டிற்கு சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான கரும்பு கிடைப்பது உறுதியாகியுள்ளது.

ஆலை நிர்வாகம் முறைப்படுத்துமா? : எளிதாக வங்கிக் கடன் கிடைப்பதாலும், புதிய தொழில் நுட்பங்களால் ஆட்கள் தேவை குறைந்துள்ளதாலும், நிலையான வருவாய் கிடைக்கும் என்பதாலும் விவசாயிகள் போட்டி போட்டுக் கொண்டு கரும்பு பயிரிடுகின்றனர். கரும்பை நடவு செய்த 12 மாதத்தில் வெட்டி ஆலைக்கு அனுப்பினால் மட்டுமே லாபம் கிடைக்கும். 12 மாதத்திற்கு மேலாகி வெட்டினால், கரும்பின் பிழிதிறன் குறைவதோடு, லாபமும் குறையும். அதிக பரப்பளவில் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளதால், 12 மாதத்தில் ஆலை நிர்வாகம் "கட்டிங் ஆர்டர்' (அறுவடை செய்ய) வழங்குமா என விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர். இதனைத் தவிர்த்திட, ஒவ்வொரு மாதத்திற்கும் ஆலைக்குத் தேவையான அளவு பரப்பளவில் மட்டும் கரும்பு நடவு செய்ய அனுமதித்தால் வரும் ஆண்டு அறுவடை உத்தரவு வழங்குவதில் பிரச்னை இருக்காது. ஆனால், ஆலை நிர்வாகம் இந்த விஷயதத்தில் கவனம் செலுத்தாமல், அதிக பரப்பளவில் கரும்பு நடவு செய்தால் போதும் என செயல்படுவதால் "கட்டிங் ஆர்டர்' கிடைப்பதில் சிக்கல் ஏற்படுமோ என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

---

**தர்மபுரி மாவட்டத்தில் 17 இடங்களில் கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2011,00:35 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 17 இடங்களில் மருத்துவ முகாம் நடக்கிறது. நேற்று நல்லம்பள்ளி யூனியன் சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் நடந்த மருத்துவ முகாமில், விவசாயிகள் தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து சிகிச்சை பெற்றனர். இன்று (பிப்.,2) பென்னாகரம் ஒன்றியம் தொன்னகுட்டஅள்ளியிலும், 4ம் தேதி தர்மபுரி ஒன்றியம் எட்டிமரத்துப்பட்டியிலும், 8ம் தேதி அரூர் ஒன்றியம் கீழ் மொரப்பூரிலும், 9ம் தேதி மொரப்பூர் ஒன்றியம் கந்தகவுண்டனூரிலும், 10ம் ÷திதி பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் கோட்டமேடு கிராமத்திலும், 11ம் தேதி காரிமங்கலம் ஒன்றியம் தாளபள்ளம் கிராமத்திலும் கால்நடை மருத்துவ முகாம் நடக்கிறது. வரும் 12ம் தேதி பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் அதிகாரப்பட்டியிலும், 15ம் தேதி தர்மபுரி ஒன்றியம் தாசம்பட்டியிலும், 17ம் தேதி நல்லம்பள்ளி ஒன்றியம் மணியக்காரனூரிலும், 18ம் தேதி பென்னாரம் ஒன்றியம் நரசிபுரத்திலும், 19ம் தேதி அரூர் ஒன்றியம் நாகம்பட்டியிலும், 21ம் தேதி மொரப்பூர் ஒன்றியம் சி.பள்ளிபட்டியிலும், 23ம் தேதி பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் செம்பியானூரிலும், 24ம் தேதி காரிமங்கலம் ஒன்றியம் மேக்கனாம்பட்டியிலும், 25ம் தேதி மொரப்பூர் ஒன்றியம் தொப்பம்பட்டியிலும், 26ம் தேதி காரிமங்கலம் அண்ணாமலைஅள்ளியிலும் கால்நடை மருத்துவ முகாம் நடக்கிறது. "முகாம்களில் அந்தந்த பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளை அழைத்து வந்து உரிய சிகிச்சை பெற்று செல்லுமாறு' கால்நடை பராமரிப்பு துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

**பொள்ளாச்சி உழவர் சந்தைக்கு காய்கறிகள் வரத்து அதிகரிப்பு:விலைசரிவால் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,22:58 IST

பொள்ளாச்சி:பொள்ளாச்சி உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரித்து வருவதால், விலை சரிந்து வருகிறது. மேலும், சூடாமணி கூட்டுறவு பண்டக சாலை சார்பில் பழங்கள் மற்றும் இங்கிலீஸ் காய்கறி விற்பனையும் துவங்கப்பட்டுள்ளது.கடந்த சில நாட்களாக அதிகமான பனி பொழிவு காரணமாக காய்கறி வரத்து குறைந்திருந்தது. இதனால், உழவர் சந்தையிலும் அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்திருந்தது. தற்போது, பனி பொழிவு குறைந்து விளைச்சல் அதிகரிக்க துவங்கியுள்ளது. இதனால், பொள்ளாச்சி உழவர் சந்தைக்கு தினமும் 95 விவசாயிகள் மூலம் 19 டன் காய்கறி வரத்தாக

உள்ளது.கடந்த வாரத்தை விட இந்த வாரம் இரண்டு டன் காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. வரத்து அதிகரித்து விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், நுகர்வோரும் அதிகளவில் வரத்துவங்கியுள்ளனர். இதுதவிர, நுகர்வோரின் வசதிக்காக இங்கிலீஸ் காய்கறிகளும், பழங்களும் குறைந்த விலையில் விற்பனை செய்யும் வகையில் சூடாமணி கூட்டுறவு பண்டக சாலை சார்பில் புதிதாக மூன்று கடைகள் துவங்கப்பட்டுள்ளன. உழவர் சந்தை துணை வேளாண்மை அலுவலர் ஈஸ்வரன், உதவி வேளாண்மை அலுவலர் மாடசாமி ஆகியோர் கூறியதாவது:பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில், காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளதால், வழக்கத்தை விட விவசாயிகள் அதிகளவு காய்கறிகளை சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். வரத்து அதிகரித்து வருவதால், வெளிமார்க்கெட்டை விட உழவர் சந்தையில் 20 சதவீதம் விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது. ஊட்டி பகுதிகளிலிருந்து வரும் காய்கறிகளை விற்பனை செய்ய கூட்டுறவு சங்கம் மூலம் ஒரு கடை அமைக்கப்பட்டுள்ளது. பழங்கள் மற்றும் ஊட்டி காய்கறிகளை விற்பனை செய்யவும், பெல்லாரி வெங்காயம் விற்பனைக்காகவும் மூன்று கடை திறக்கப்பட்டுள்ளதால், நுகர்வோர் அதிகளவில் வரத்துவங்கியுள்ளனர். இன்னும், ஒரு வாரத்தில் விலை மேலும் சரியும் வாய்ப்புள்ளது. வாடிக்கையாளர்கள் வசதிக்காக உழவர்சந்தையில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வியாபாரிகளின் குறுக்கீடு இல்லாததால், விவசாயிகளும் ஆர்வமுடன் காய்கறிகளை விற்பனை செய்கின்றனர், என்றனர்.

---

**விவசாயிகளுக்கு ரூ.19 கோடி நிவாரணம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:45 IST

சிவகங்கை : சமீபத்திய மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண தொகை, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும். கலெக்டர் சம்பத் கூறியதாவது: மாவட்டத்தில் தொடர் மழை, நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் நெல், மிளகாய், நிலக்கடலை, பயறு வகைகள், காய்கறி பயிர்கள் பாதிக்கப்பட்டன. அதற்கான நிவாரண தொகை 19 கோடி 22 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய், தொடக்க கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு எக்டேருக்கு 10 ஆயிரம், இறவை பயிர்களுக்கு 7,500;

---

மானவாரி பயிர்களுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும். தொடக்க கூட்டுறவு வங்கிகளில் கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு புது கணக்கு துவங்கப்பட்டு, தொகை வரவு வைக்கப்படும். நிவாரணம் கேட்டு விண்ணப்பித்த விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களை அணுகலாம், என்றார்.

---

## *ரசன் கடைகளில் துவரம் பருப்பு, பாமாயில் விலை குறைத்து விற்பனை*

## *பொருட்கள் வாங்க பொதுமக்கள் ஆர்வம்*

*கோவை,பிப்.2–*
*ரேசன் கடைகளில் நேற்று முதல் துவரம்பருப்பு, உளுந்து, பாமாயில் விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது. முதல் நாளான நேற்றே பொருட்கள் வாங்க பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்தனர்.*

***விலை குறைப்பு***

*தமிழக ரேசன் கடைகளில் துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை கிலோ ரூ.40–க்கும், மற்றும் பாமாயில் ஒரு லிட்டர் ரூ.30–க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது.*

*இந்த நிலையில் விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் மானிய விலையில் வழங்கப்படும் துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில் விலையை குறைக்க அரசு முடிவு செய்தது.*

*துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு விலையை ரூ.10 குறைத்து ரூ.30–க்கும், மற்றும் பாமாயில் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.5 குறைத்து ரூ.25–க்கும் விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று முதல் ரேசன் கடைகளில் துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில் ஆகியவற்றின் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டது.*

***பொதுமக்கள் ஆர்வம்***

*கோவை மாவட்டத்தை பொறுத்தவரை 2,200 ரேசன் கடைகள் உள்ளன. இந்த*

*கடைகளில் நேற்று காலை 9 மணிமுதல் பொருட்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டன. இதுபற்றி அறிந்ததும் பொதுமக்கள் ஆர்வத்துடன் சென்று கடைகளில் பொருட்களை வாங்கிச்சென்றனர்.*

*இதுபற்றி மாவட்ட வழங்கல் அதிகாரி சீனிவாசன் கூறும்போது, ‘அரசு உத்தரவுப்படி துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில் ஆகிய பொருட்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது. கோவை மாவட்டத்துக்கு 678 மெட்ரிக் டன் துவரம்பருப்பு, 610 மெட்ரிக் டன் உளுந்தம்பருப்பு, 764 கிலோ லிட்டர் பாமாயில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த பொருட்களை அனைத்து கடைகளுக்கும் தேவைக்கு ஏற்ப அனுப்பி வைத்து வருகிறோம்’ என்றார்.*

---

நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம்

## சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.6 லட்சம் கடன்

ஊட்டி, பிப்.2–

நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி எம்.பாலாடா கிளையின் மூலம் பைகமந்து கிராமத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் உதவி வழங்கும் விழா நடந்தது. விழாவுக்கு மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் கே.ஜெயக்குமார் தலைமை தாங்கினார். இதில் ரூ.6 லட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடனை கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் ரா.தயாளன் வழங்கினார். இதில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3.60 லட்சமும், ஆடவர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2.40 லட்சமும் கடன் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வங்கியின் பொது மேலாளர் எல்.மாதன், கடன் மேலாளர் விஸ்வநாதன், கூட்டுறவு பிரசார அலுவலர் பி.தருமன், பைகமந்து ஊர் நாட்டாண்மை ராமச்சந்திரன், ஊர் தலைவர் போஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி எம்.பாலாடா கிளையின் மூலம் பைகமந்து கிராமத்தில் ரூ.6 லட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடன்களை இணைப்பதிவாளர் ரா.தயாளன் வழங்கிய போது எடுத்த படம்.

---

## கூடலூரில், ரூ.24 லட்சம் செலவில் உழவர் சந்தை அமைக்கும் பணி தீவிரம்

கூடலூர்,பிப்.2–
கூடலூரில் ரூ.24 லட்சம் செலவில் உழவர் சந்தை அமைக்கும் பணி மிக விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. மாத இறுதியில் உழவர் சந்தை திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உழவர் சந்தை அமைக்கும் பணி விறுவிறுப்பு**

கூடலூர் புதிய பஸ் நிலையம் அருகே நகராட்சிக்கு சொந்த மான இடத்தில் உழவர் சந்தை அமைப்பதற்காக வேளாண் விற்பனை துறை சார்பாக ரூ.24.37 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டது. பின்னர் கடந்த மாதம் 16–ந் தேதி கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் அடிக்கல்லை நாட்டி உழவர் சந்தை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

தற்போது உழவர் சந்தை அலுவலகம் கட்டும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. பிறகு 20 கடைகள் கட்டுமான பணிகள் நடைபெற உள்ளது. இதையொட்டி வேளாண் விற்பனை துறை மூலம் உழவர் சந்தையில் காய் கறிகளை விற்பனை செய்யும் விவசாயிகளை தேர்வு செய்யும் பணியும் விரைவில் நடைபெற உள்ளது.

**மாத இறுதியில் திறக்க முடிவு**

மேலும் உழவர் சந்தைக்கு காய்கறிகளை கொண்டு இறக்குவதற்கு வசதியாக வண்டிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வழியாக செல்லும் சாலையில் முன்புற வாசல் அமைக்கப்பட உள்ளது. மேலும் மைசூர் சாலை கரையோரம் உழவர் சந்தைக்கு செல்லும் சிறிய படிக்கட்டுகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன. இதனால் பொதுமக்கள் எளிதாக உழவர் சந்தைக்கு வரும் வகையிலும், வாகனங்கள் பின்புறம் வழியாக செல்லும் வகையிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து வேளாண் விற்பனை துறையை சேர்ந்த அலுவலரிடம் விசாரித்த போது, ரூ.24.37 லட்சம் செலவில் கூடலூரில் உழவர் சந்தை அமைக்கும் பணி வேக மாக நடைபெற்று வருகி றது.

இந்த பணிகள் மிக விரைவில் முடிக்கப்பட்டு இந்த மாத இறுதியில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என தெரி வித்துள்ளார்.

தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுமா?

First Published : 31 Jan 2011 02:59:33 AM IST

திருவெறும்பூர்: தமிழகத்தில் விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருக்கும் விவசாயம் தற்போது வெகுவாக அழிந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 60 லட்சம் ஹெக்டேரில் நடைபெற்ற விவசாயம், இப்போது 48 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

காவிரி டெல்டா பாசன விவசாயத்துக்கு குறித்த நேரத்தில் தண்ணீர் கிடைப்பதில்லை, நிலத்தடி நீரும் வெகுவாகக் குறைந்து வருகிறது. உர விலை உயர்வு, வேலையாள் பற்றாக்குறையால் விவசாய நிலங்கள் விற்பனை நிலங்களாக மாறி வருகின்றன.

எஞ்சியிருக்கும் நிலங்களில் விவசாயம் மேற்கொண்டுள்ள விவசாயிகள், இப்போது கூலித் தொழிலாளர்கள் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். இதற்கு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டமும் முக்கியக் காரணம்.

கிராம ஏழைகளின் வறுமையைப் போக்கும் நோக்கத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தால் கிராம மக்கள் அனைவரும் பயனடைந்து வருகின்றனர்.

ஆனால், இந்தத் திட்டமானது விவசாயப் பணிகள் நடைபெறும் கால கட்டங்களிலும் செயல்படுத்தப்படுவதால் விவசாயப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காமல் பல கிராமங்களில் இயந்திரங்களைக் கொண்டு பணிகள் நடைபெற்றன. மேலும் சில கிராமங்களில் விவசாயமே மேற்கொள்ளப்படவில்லை.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: இந்தத் திட்டத்தால் கிராம மக்கள் பயனடைந்தாலும், விவசாயப் பணிகளுக்கு ஆள்கள் கிடைக்காததால் நிகழாண்டில் நடவுப் பணிக்கு இயந்திரங்கள், அதிக கூலி கொடுத்து வெளியூர்களிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்தோம். இந்நிலை நீடித்தால், வருங்காலங்களில் விவசாய நிலங்களை விற்பதைத் தவிர வேறு வழியில்லை என்றனர்.

எனவே, விவசாயப் பணிகள் நடைபெறும் காலகட்டம் தவிர, மற்ற காலங்களில் வேலை உறுதித் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

---